RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s751

# ம.பொ. சிவஞானம் பார்வையில் வள்ளலார்

**இரா. கீதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி, சென்னை-600017, தமிழ்நாடு, இந்தியா.

# Ma.Po. Sivagnanam in the Sight of Vallalar

**R. Geetha** [a, *]

[a] Department of Tamil, Shri Shankarlal Sundarbai Shasun Jain College for Women, Chennai-600017, Tamil Nadu, India

* Corresponding Author: geetha@shasuncollege.edu.in

Received: 17-12-2021
Revised: 25-04-2022
Accepted: 04-05-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

Literature is a document that reveals human life and history. It was created to guide and refine human minds and can be seen to stand the test of time. In this way, Mr Arudprakasa Vallavar, who incarnated in Tamil Nadu in the nineteenth century for the benefit of the human race, gave the devotional literature called 'Thiruvarutpa', which is an auspicious treasury, to the world for the benefit of the people. The social environment of his time formed the background for his spiritual ideas and revolutionary reform ideas. After alleviating the hunger of the people, he made it his chief virtue to feed them with spiritual thought. He knew that people get caught up in superstitions and waste time and money. He said that the Puranas and Satras believed by the people are false and not true. Vallalar hated to distinguish people by birth. He insisted that a society without caste and religion should flourish as caste and religion are the reason for the disparity between people. Vallalar realized that enmity and strife arose among the people as people worshipped and created various deities. Vallalar, who saw the Lord in the form of light, said that the Lord is one and He is Sothivadivin. He inculcated a sense of unity among the people by presenting the life-saving thought of Sivakarunyam. Vallalar is a worshipful and revolutionary reformer who is worshipped as the people's deity. In 1966, the book "Vallalar's Kanda orumaippadu" was written by Chilambuch Selvar, Dr M.B. Sivagnanam, to spread his sense of unity among the people, based on Vallalar's devotion to God and patriotism, received the Sahitya Akademi award in 1966. The Bhakti Norm, Sivakarunyam, Spiritual Integrity, Kolla Norm, and Anti-caste Religion of Vallalar are highlighted in this article and are thoroughly examined.

**Keywords:** Vallalar, Conciliatory Virtue, Compassion for Life, Spiritual Integrity,

## முன்னுரை

மண்ணிலே உயிர்கள் படும் துயர் கண்டு உருகுபவர்களே அருளாளர் ஆவார்கள். அவ்வகையில் உயிரிரக்கத்தின் வடிவமாகத் திகழ்பவர் வள்ளலாராவார். அவருடைய பாடல்கள் சமயச் சமுதாய விழிப்புணர்வு கொள்கைகளையும் உலகளாவிய மனிதநேயச் சிந்தனைகளையும் அடிப்படையாகக் கொண்டவை. வள்ளலார் தீவிர சமயச், சமுதாயம் சார்ந்த சீர்திருத்தவாதியாகக் காட்சியளிப்பதை உலகுக்கு எடுத்துரைப்பதற்காகவும்” ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற அடிப்படையில் அவர் பாடிய சீர்திருத்தப்பாடல்கள் பரப்பப்பட வேண்டுமென்ற நோக்கில் சிலம்புச்செல்வர் முனைவர் ம.பொ. சிவஞானம் அவர்களால் எழுதப்பட்ட “வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு” என்னும் நூல் 1966 ஆம் ஆண்டு

சாகித்ய அகாடமி விருது பெற்றது. இந்நூலில் காணப்படும் வள்ளலாரின் பக்தி நெறி, சீவகாருண்யம், ஆன்மநேய ஒருமைப்பாடு, கொல்லா நெறி, சாதிச் சமய எதிர்ப்பு, நடுநிலை அரசியல் குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கிறது

## பக்தி நெறி

வள்ளலார் வகுத்த சமரச சுத்த சன்மார்க்க நெறியின்படி இறைவன் ஒருவனேயாவான் அவன் சோதி வடிவானவன் ஆவார். வள்ளலார், தாம் சோதி வடிவில் கண்ட இறைவனை அருட்பெருஞ்சோதி என்று பெயரிட்டு அழைத்தார். ஓர் உடலுக்கு ஓர் உயிர் மட்டுமே இருப்பதைப் போல, இவ்வுலகத்தைப் படைத்து ஆளும் கடவுளும் ஒருவர்தான் என்பதை நாம் உணரவேண்டும் என்கிறார். வள்ளலார், தெய்வம் ஒன்றே என்ற மெய்க்கருத்தை அறியாமல், பொய்களைக் கூறும் மதங்களையும் சாத்திரங்களையும் நம்பி, இது எமது தெய்வம், இது எமது தெய்வம் என்று கதறும் அறியாமை என்னும் இருட்டறையில் மக்கள் சிக்கித் தவிப்பதை,

“எவ்வகைச்சார் மதங்களிலே பொய்வகைச் சாத் திரங்கள்

எடுத்துரைத்து எமது தெய்வம் எமது தெய்வம் எனது

கைவகையே கதறுகின்றீர் தெய்வம்ஒன்றென் றறியீர்”

என்ற பாடலால் அறிவுறுத்துகிறார் (Avvai Duraisamy pillai, 2010). வெவ்வேறு தெய்வ வடிவங்களை உருவாக்கி வழிபடுவோர் பெரும்பாலும் வெவ்வேறு சாதி, சமயங்களைச் சேர்ந்தவர்களாகவே காணப்பட்டனர். அதனால் இறைவழிபாடு என்பது வேற்றுமைக்கே வித்திட்டது என்பதை வள்ளலார் அறிந்தார். “தெய்வம் பலபல சொல்லும் மூடத்தனத்தை அடிகளார் வெறுத்தார், சிவம் என்னும் ஒன்றையே தெய்வமெனக் கொண்டார். அவரது சிவம், நாம-ரூப பேதங்களால் சுட்டப்படும் ஆண் தெய்வமோ பெண் தெய்வமோ அன்று” (Sivagnanam, 2015) வள்ளலார் குறிப்பிடும் சிவம் என்பது எல்லாச் சமயங்களுக்கும் தத்துவங்களுக்கும் உரிய ஒரே ஒரு முழு முதலாகும் என்பதை,

“எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்

இயல்உண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்

மெய்ப்பொருளாம் சிவம்ஒன்றே என்றறிந்தேன்”

என்று தம் பாடலடிகளால் உணர்த்துகிறார் (Avvai Duraisamy pillai, 2010).

வள்ளலார் தம் உள்ளுணர்வால் எழுந்த ஞான அனுபவத்தால் இறைவன் ஒருவனே அவன் சோதி வடிவினன் என்று கண்டு தெளிந்து ஒளிவழிபாட்டை நடைமுறைப்படுத்தினார். ம.பொ. சி அவர்கள் வள்ளலாரின் ஒரே தெய்வம் என்ற கொள்கையைக் குறித்து உரைக்கும் போது” பழைய சான்றோர்கள் சமயாச்சாரியார்கள் வலியுறுத்திய அறங்களைத் தழுவி, அறிவுரைகளை ஏற்றுத் தம் காலத்தின் சூழ்நிலைக்கேற்பச் சிலபல கொள்கைகளைச் சீர்திருத்த முறையில் வகுத்தார். பழைய கொள்கைகளுக்குத் தெளிவுரைகள் தந்தார்” என்கிறார். அவர் மேலும் “சிவம் என்பதற்குப் பொருள் ஸச்சிதானந்தம், ஸச்சிதானந்தம் என்பது ஸத்து சித்து ஆனந்தம். சி - சத்து, வ-சித்து, ம்- ஆனந்தம், சி- எல்லாம் உள்ளதாய் விளங்குவது, வ-எல்லாம் விளங்குவதாயுள்ளது. ம்-. இந்த இரண்டிலும் நிரம்பிய இன்பம்” என்று வள்ளலாரின் வாக்கைச் சுட்டிக்காட்டுகிறார் (Sivagnanam, 2015).

## சீவகாருண்யம்

வள்ளலார் கடைப்பிடித்த சமரச சன்மார்க்க நெறியின் உயிர் மூச்சாக விளங்குவது சீவகாருண்யம் அல்லது உயிரிரக்கச் சிந்தனையாகும். பிற உயிர்களிடம் காட்டும் அன்பே தனிமனிதனை மேம்படுத்தும் முதற்படி என்று வள்ளலார் நம்பினார். வள்ளலார் தன்னையும் உயிரிரக்கத்தையும் வேறுபடுத்திப் பார்க்கவில்லை இரண்டையும் ஒன்றாகவே கண்டார். உயிரிரகத்தின் வடிவமாகவே அவர் திகழ்ந்தார் என்பதை கீழ்க்கண்ட பாடலால் அறியலாம்.

“உருவனன் உயிர்தான் உயிர்இரக் கந்தான்

ஒன்றதே. இரண்டிலை இரக்கம்

ஒருவில்என் உயிரும் ஒருவும்என் உள்ளத்

தொருவனே நின்பதத் தானை”

சீவகாருண்யத்தைக் கடைப்பிடிக்கும் போது அறிவும் அன்பும் ஈகையும் விளங்கும் அதனால் அனைத்து நன்மைகளும் தோன்றும் அது மறையும் போது அறிவும் அன்பும், ஈகையும் உடன் மறைந்து எல்லாத் தீமையும் தோன்றும். அதனால் புண்ணியம் என்பது சீவகாருண்யம் என்றும் பாவமெனபது சீவகாருண்யமில்லாமை என்றும் அறியப்படும் என்பது வள்ளலார் வாக்காகும் (Avvai Duraisamy pillai, 2010).

## ஆன்மநேய ஒருமைப்பாடு

உயிர்கள் அனைத்திடமும் அன்பு செலுத்தப்பட வேண்டும் என்பது சீவகாருண்யம். அடிகளார் அதனினும் ஒரு படி மேலே சென்று தேகபேதங்களை மறந்தவராகி, உயிர்களையெல்லாம் ஒரே இனத்தைச் சார்ந்தவையாகக் கூறுகிறார். அது ஆன்மநேய இனமாகும். அந்த அடிப்படையில் கருணையையே மதமாக கொண்ட ஒரு புத்தம் புதிய உலகை அமைக்க முயன்றார் வள்ளலார் என்பது ம.பொ. சியின் கருத்தாகும்.

வள்ளலாரின் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைப் பேதங்கள் அற்ற அபேத சித்தாந்தமாகும். உயிர்களெல்லாம் ஒருரிமை இனத்தவர்களேயாகும். ஓருயிர் ஆபத்தால் துன்புறுவதைக் கண்டபோதும் கேட்டபோதும் அறிந்த போதும் அவ்வுயிரானது நமது ஆன்ம இனம் என்று தெரிந்து, அவ்வுயிரின் துன்பத்தை நீக்குவது நம் ஆன்ம உரிமையென்று அறிய வேண்டும் என்பது வள்ளலாரின் வாய்மொழியாகும். இதனை,

“எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே

எண்ணிநல் இன்புறச் செய்யவும்”

என்ற வள்ளலாரின் பாடலடிகளால் அறியலாகிறது (Avvai Duraisamy pillai, 2010). உயிரினத்திடையே - குறிப்பாக மனிதரிடையே ஒருமைப்பாட்டினை வளர்க்கத் தடையாக இருக்கும் எதனையும் தெய்வ சக்தியாகவோ, தெய்வ சம்மதமாகவோ ஏற்க மறுக்கிறார் வள்ளலார். உயிர்கள்பால் அன்பு காட்டும் உணர்வு தோன்றினாலன்றி, மனித குலத்தினரிடையே ஒற்றுமை ஏற்படுவதோ? இந்தியரிடையே தேசிய ஒருமைப்பாடு தோன்றுவதோ? சாத்தியமில்லை என்கிறார் (Sivagnanam, 2015).

## புலால் மறுப்பு

வள்ளலார், இறைவனை அடைவதற்கு பக்தியும் கருணையுமே சாதனங்கள் என்றறிந்தார். அதனால் கொல்லாநெறியை வலியுறுத்தினார். வள்ளலார் புலாலுண்பதை வன்மையாகக் கண்டித்தார். பண்டைக்காலத் தமிழர்கள் புலால் உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். சமண, பௌத்த சமயங்கள் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில்தான் புலாலுண்ணும் வழக்கத்திற்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. அதற்கு முன்பு ஆடுகளைப் பலியிட்டு அந்தணர்களும் புலாலுண்டனர் என அறிகிறோம். கொல்லாநெறியைக் குறித்துத் தாயுமானவர்,

“கொல்லாவிரத மொன்றுகொண்டாரே நல்லோர்மற்று

அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே”

இவ்வரிகளில் கொல்லா விரதம் கடைப்பிடிப்பவர்களை “நல்லோர்” என்றும் மற்றவர்களை” யாரோ அறியேன்” என்கிறார் (Thayumanavar, 2014). இக்கருத்தையே வள்ளலாரும்

“உயிர்க்கொலையும் புலைப்பசியும் உடையவர்கள் எல்லாம்

உறவினத்தார் அல்லர் அவர்புற இனத்தார்"

என்று கொல்லாநெறியைப் பின்பற்றுபவர்களை" உறவினத்தார்" என்றும் பின்பற்றாதவர்களைப்" புறவினத்தார்" என்கிறார் (Avvai Duraisamy pillai, 2010). ''புலாலுண்ணாமையைச் சாதாரண மக்களுக்கு அறிவுறுத்தினாலும் அடிகள்" உறவினத்தார்" என்றும்" புறவினத்தார்" என்றும் பிரிவினைச் செய்தது, சன்மார்க்க சங்கத்தவர்களையே, சாதாரண மக்களையன்று". அவர் புலாலுண்பவரை புறவினத்தாராகக் கூறினாலும் அவர்களுடைய பசியையும் போக்க வேண்டுமென்று பரம்பொருள் தமக்கு ஆணையிட்டதாக வள்ளலார் அறிவிக்கிறார் (Sivagnanam, 2015).

வள்ளலாரின் புலால் மறுத்தலைக் குறித்து ம.பொ. சி அவர்கள் கூறும்போது "புலாலுணவை விட்டதனாலேயே ஒருவர் சுத்த சன்மார்க்கியாக முடியாது. ஆறறிவு படைத்த மனிதர்களைப் பல வகையிலும் துன்புறுத்தும் கொடியவர்கள் பலரும் புலாலுண்ணாதவர்களாக இருக்கக் காண்கிறோம். இந்திய தேசிய ஒருமைப்பாடானாலும் சரி வள்ளலார் விரும்பிய ஆன்மநேய ஒருமைப்பாடானாலும் சரி, எள்ளளவும் பேதமின்றி உள்ளத்தால் விரும்பவேண்டும்" என்கிறார் (Sivagnanam, 2015).

"எத்துணையும் பேதமுறாது எவ் வுயிரும்

தம்முயிர்போல் எண்ணி உள்ளே

ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்

யாவர் அவர் உளந்தான் சுத்த

சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்

இடமெனநான் தெரிந்தேன் அந்த

வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்

சிந்தைமிக விழைந்த தாலோ"

மனிதநேயம் உள்ளவர்களின் உள்ளமே இறைவன் குடியிருக்கும் இடம் என்ற கருத்தை உள்ளடக்கியதாய் வள்ளலாரின் மேற்கண்ட பாடல் அமைந்துள்ளதைக் காணலாம் (Avvai Duraisamy pillai, 2010).

## உயிர்ப்பலி எதிர்ப்பு

தெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுப்பதை ஒளிவு மறைவு இன்றி கண்டித்த பெருமை வள்ளலாருக்கே உரியது. தெய்வங்களின் பெயரால் உயிர்களைக் கொல்லும் கொடிய வழக்கம் சங்ககாலந்தொட்டே தமிழர்களிடையே நிலவி வருகிறது. அதனால் உயிர்ப்பலியிடப்படும் சிறுதெய்வக் கோயில்களுக்குச் செல்வதை வள்ளலார் வெறுத்தாரென்பதை,

"கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்

கண்டகா லத்திலும் பயந்தேன்"

என்ற பாடலால் அறியலாம் (Avvai Duraisamy pillai, 2010). அவர் வாழ்ந்த காலத்திலும் காடன், மாடன், வீரன், காளி, மாரி, காட்டேரி என்னும் பல தெய்வக்கோயில்கள் ஊர்தோறும் காணப்பட்டன. அந்தத் தெய்வங்கள் மக்களுக்கு நோய்களைத் தரக்கூடியன என்ற மூடநம்பிக்கையும் இருந்து வந்தது. அதனால் நோய்கள் வராமல் தடுப்பதற்காக மக்கள் இத்தெய்வங்களுக்கு ஆடு, கோழிகளை நூற்றுக்கணக்கில் இரக்கமின்றி பலியிட்டு வந்தனர். அன்பே உருவான கடவுள் உயிர்ப்பலி கேட்பதில்லை என்பது வள்ளலாரின் அறிவுறுத்தலாகும்.

"வீணுறு கொடியர் கையிலே வாளை

விதிர்த்தல்கண் டென்என் வெருண்டேன்"

வள்ளலார், உயிர்ப்பலிப்பற்றி கண்டபோதும் கேட்டப்போதும் உள்ளம் குமுறினார் (Avvai Duraisamy pillai, 2010). வெறும் பயிர் வாடுவதைக் கண்டபோது தானும் அத்துன்பத்தை உணர்ந்து வாடியதாகக் கூறும் வள்ளலாரின் மனம் எவ்வளவு பாடுபட்டிருக்கும் என்பதை நம்மால் உணரமுடிகிறது. இறைவன் எல்லையற்ற சோதி வடிவானவன், அன்பும் கருணையுமே அவனுடைய பண்பு என்பதே வள்ளலாரின் வாய்பொழியாகும்.

## சாதி, சமய எதிர்ப்பு

அவர்கள் வள்ளலாரின் சிறப்புக் குறித்து கூறுகையில் பிற சமயங்களின் படையெடுப்பால் அழிந்து கொண்டிருந்த பாரதக் கலாச்சாரத்தைக் காப்பதற்காகவும் இந்து- முஸ்லிம்- கிறித்துவ சமயங்களிடையே ஒருமைப்பாடு காணவும் மக்களிடையே நிலவிய மூடநம்பிக்கைகளைச், சாதி வழிப்பட்ட உயர்வு - தாழ்வு மனப்பான்மைகளைப், போலி வைதிகர்களின் புரட்டுச் சடங்குகளை அடியோட அழிக்கவும் புரட்சிக்கரமான சீர்திருத்தவாதிகள் தேவைப்பட்டனர். இத்தேவையை முழுவதுமாகத் தீர்த்து வைப்பதற்காக அவதரித்தவரே என்கிறார் (Sivagnanam, 2015).

ஏசு, நபி, காந்தியடிகள் ஆகிய அனைவருமே தங்களை ஆண்டவனின் தூதர்களாக (தொண்டர்களாகக்) கருதி தொண்டாற்றினர். மக்களும் அவர்களை அவதார புருடர்களாகவும் தீர்க்கத்தரிசிகளாகவும் நம்பிப் பின்பற்றினர். வள்ளலாரும் ஆண்டவன் அனுப்பிய தூதராகத் தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொண்டார்" மக்களை நல்வழிப்படுத்த வேண்டுமென்றால் முதலில் அவர்கள் பினபற்றும் சாதி, சமய, மூடபழக்கவழக்கங்கள் ஆகியவற்றிலிருந்து அவர்களை மீட்க வேண்டும் என்றெண்ணினார். சாதி, சமயங்களனைத்தும் பொய் என்று ஆதியில் அருட்சோதிக்கடவுளே தமக்கு உணர்த்தியாக கீழ்க்கண்ட பாடலின் வழி உணர்த்துகிறார் (Sivagnanam, 2015).

"சாதியும் சமயமும் பொய்யென ஆதியில் உணர்த்திய

அருட்பெருஞ் சோதி"

மக்கள் அனைவரையும் திருத்திச் சன்மார்க்கச் சிந்தனைகளைப் பின்பற்ற செய்ய வேண்டுமென்பதற்காக இறைவனால் வருவிக்கப் பெற்றவன் தான் என்பதை (Avvai Duraisamy pillai, 2010),

"உலகர் அனைவரையும்

சகத்தே திருத்திச் சன்மார்க்க

சங்கத் தடைவித் திடஅவரும்

உகத்தே இறைவன் வருவிக்க

உற்றேன் அருளைப் பெற்றேனே"

என்கிறார் (Avvai Duraisamy pillai, 2010). நால் வருணப்பாகுபாட்டினை, குலம், சாதி, சமய வேற்றுமைகளை அறவே வெறுத்து, கண்டித்துப் பாடியும் பேசியும் வள்ளலார் தம் கருத்துக்களை மக்களிடையே கொண்டு சேர்த்தார்.

"நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா

நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளை விளையாட்டே"

என்று பாமரனுக்கும் புரியும் வகையில் எடுத்துரைத்தார் (Avvai Duraisamy pillai, 2010). "சாதியொழிப்புப் பேசுவோர், தம்மளவில் சுயசாதிப் பற்றாளர்களாகச் செயல்படுவதைக் காண்கிறோம்" ஆனால் "சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்ந்தேன் சாத்திரக் குப்பையுந் தவிர்ந்தேன்" என்று வள்ளலார் தம்மளவில் சுயசாதிப் பற்றினை ஒழித்தவராய், உலகினருக்குச் சாதியொழிப்பினை உபதேசித்தார் (Sivagnanam, 2015).

## நடுநிலை அரசியல்

சிலம்புச் செல்வர் அவர்கள் ஆங்கிலேயரின் ஏகாத்தியப்பத்திய ஆட்சியை வருணிக்கும் போது பிரிட்டிஷ் ஸ்ரீ பிரெஞ்சு- டச்சு-போர்ச்சுகீசு நாடுகளின் நாடோடி வர்த்தகக்கூட்டங்கள், தங்கள் சரக்குகளை விற்கும் சந்தைக்கடையாகப் பாரத நாட்டைப் பயன்படுத்தின. வாணிகத்தில் ஏற்பட்ட போட்டி-பொறாமை காரணமாக, அந்த நாடோடிகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டதோடு, உள்நாட்டு மன்னர்களிடையேயும் சண்டை மூட்டி விட்டுப் பாரதம் முழுவதையும் குருஷேத்திரம் ஆக்கினர்". வள்ளலார் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் தம் புரட்சிக்கரமான கருத்துக்களை முழங்கினார். கருணையற்ற ஆங்கிலேய அரசால் இந்திய மக்கள் பட்ட துன்பங்களைக் கண்டு வள்ளலார் உள்ளம் பதைத்து (Sivagnanam, 2015),

"கருணை இலா ஆட்சி கடுகி ஒழிக

அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க"

என்றார். "சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம்" என்னும் மூன்று மகாமந்திரங்கள் அடிகளார் காலத்தில் ஐரோப்பாவில் ஒலித்தன (Avvai Duraisamy pillai, 2010). அத்தகைய சூழ்நிலையில் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை நிறைந்த உலகத்தை வள்ளலார் காண விரும்பினார். மக்களிடையே நிலவி வரும் நீதியற்ற உயர்வு - தாழ்வு நியதிகளை ஒழித்து, எல்லாரும் சுதந்திர - சமத்துவ அடிப்படையில் உள்ளத்தால் ஒத்து வாழும் சகோதரர்களாய் ஒருமையுளராகி உலகியல் நடத்த வேண்டுமென்றார்.

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்

ஒருமையுள ராகிஉல கியல் நடத்த வேண்டும்"

என்பதே தம் சமுதாயக் கொள்கை என்று பறைசாற்றுகிறார் (Avvai Duraisamy pillai, 2010). இந்த பொன்மொழி அரசியல்வாதிகளுக்கு அவர் தந்த புனிதமொழியாகும் என்கிறார் ம.பொ. சி அவர்கள். "மதங்கள் ஒன்றோடொன்று சண்டையிட்டாலும் அவற்றிடம் பொதுவான குறிக்கோள் ஒன்று உண்டாம். அது, மக்களிடமிருந்து கொள்ளையடிப்பது. அதனை உணர்த்தவே" கொள்ளைவினைக் கூட்டுறவால் கூடிய பல்சமயக் கூட்டம், என்று சாடுகின்றார். வள்ளலார் சாடுவது, மதத்தையன்று, மதத்தின் பெயரால் மக்கள் சுரண்டப்படும் கொடுமையையே" மதப்போர், ஆயுதப்போர் ஆகிய இருவகைப் போர்களையும் வெறுத்தார் (Sivagnanam, 2015). மதவாதிகளிடம் நடுவு நிலைமை இல்லாதது கண்டு வேதனை அடைந்தார். இக்கருத்தை உள்ளடக்கியதாக இப்பாடல் அமைந்துள்ளது,

"கொள்ளை வினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்

கூட்டமும் அக்கூட்டத்து கூவுகின்ற கலையும்"

இந்திய தேசிய ஒருமைப்பாட்டினை விரும்புவோருக்கும் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையை விரும்புகின்றவர்களுக்கும் மிகச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறார் (Avvai Duraisamy pillai, 2010).

## முடிவுரை

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரையும் தன்னுயிர் போல் எண்ண வேண்டும்" என்ற உயிரிரக்கச் சிந்தனையை உலகுக்கு அளித்து தனிமனிதனும் சமுதாயமும் மேன்மையுற உழைத்த ஒரு பகுத்தறிவு சிந்தனையாளர் வள்ளலாராவார். மக்கள் தன் பிறவியின் பயனைக் காலமுள்ள போதே அடையவேண்டுமென்று பாமரர்களும் அறிந்துகொள்ளும் வகையில் தம் எளிமையான பாடல்களால் அறிவுறுத்தினார். வள்ளலார் உயிரிரக்கச் சிந்தனையை முன்வைத்தது உலகளாவிய அமைதிக்கும் ஒற்றுமைக்கும் வழிவகுப்பதாக அமைந்துள்ளது. வள்ளலாரது பக்தி நெறி, சீவகாருண்யம், ஆன்மநேய ஒருமைப்பாடு, கொல்லா நெறி, நடுநிலை அரசியல், சாதி சமய சழக்கினை விட்டொழிக்க வேண்டும் என்ற கருத்து ஆகியவை இன்றைய சமுதாயத்திற்கு மிகவும் அவசியமானவை. வள்ளலார் சமய உணர்வும் சமுதாய உணர்வும் ஒருங்கே கொண்டிருந்தார். சமதாயப்பணியே இறைப்பணி என்று

தொண்டாற்றினார். மக்களிடையே இரக்க உணர்வை ஊட்டவேண்டும் என்பதற்காகத் தம் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்தவர் வள்ளலாராவார்.

## References

Avvai Duraisamy Pillai, S., (2010) Thiruvarutpa, Varthamanan Pathippagam, Chennai, India.

Sivagnanam, M.P., (2015) Vallalar Kanda Orumaippadu, Varthamanan Pathippagam, Chennai, India.

Thayumanavar, (2014) Paraparakanni, International Institute of Tamil Studies, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License